# யாழ்நகர் துணை மேற்றிராணியார்

# அபிஷேகம்: கார்த்திகைத் திங்கள் 21

"காததர் நகரதலைக் காககாவிட்டால
அதைக காக்கிறவன் கண்விழிப்பது விர்த்தம

# காவலன்

தந்தி: "கதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 300.
Registered at the Ceylon G. P. O. as a Newspaper

43-ம் புத். | யாழ்ப்பாணம், 1968-ம் வரு கார்த்திகைமீ 2-ந்உ சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 42-ம் இல.

யாழ்ப்பாண மேற்றிராசனத்தின் துணைமேற்றிராணியாராக நியமனம் பெற்றிருக்கும் வந். எல். ஆர். அன்ரனி அடிகளார் கார்த்திகைத் திங்கள் 21 ஆம்தேதி காலை 8மணிக்கு யாழ்ப்பாணம், பரி. கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவில் மைதானத்தில் அமைக்கப் படவிருக்கும் விசேட அரங்கில் மேற்றிராணியாராக அபிஷேகிக்கப் படுவார்.

யாழ்ப்பாண மேற்றிராணியார் ஜே. எமிலியானுஸ்பிள்ளை அடிகளார் அபிஷேகத் திருச்சடங்கை நடத்துவார். திருகோணமலை, மட்டக்களப்பு மேற்றிராணியார் இக்னேஷஸ் கிளென்னி அடிகளாரும், சிலாபக் கூட்டுமேற்றிராணியார் மார்க்கஸ் பர்ணந்து அடிகளாரும் கூட்டு அபிஷேகர்களாவர். இவர்களைவிட வேறுமேற்றிராணிமாரும் பலகுருமார், கன்னியர்களும், ஆயிரக்கணக்கான விசுவாசிகளும் இத்திருச்சடங்கில் கலந்து கொள்வார்களென் எதிர்பார்க்கப்படுகிறது.

## ஒலிம்பிக் விளையாட்டு வீரர்களுக்கு

## பாப்பரசரின் செய்தி

இம்மாதம் மெக்சிக்கோ நகரத்தில் ஆரம்பித்த ஒலிம்பிக் விளையாட்டில் பங்குபெறும் வீரர்களுக்குப் பரிசுத்த தந்தை ஒரு உருக்கமான செய்தி அனுப்பியிருக்கின்றார். "மக்களே! நீங்கள் உலக சமாதான சிற்பிகள் என்பதை என்றும் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் விளையாட்டு ஆர்வம் உலகெங்கும் பரவி, முன் போர்க்களங்களாய் விளங்கிய இடங்களை விளையாட்டு மைதானங்களாக ஆக்கட்டும். நீங்கள் யாவரும் ஒரு நகரில் கூடி சகோதரபான்மையில் போட்டியிடுவதுபோல் உலகு எத்திசையிலும் சமாதான முறையில் உலகின் நன்மைக்கான முயற்சிகளில் உலக தேசங்கள் ஈடுபடுவதாக மெக்சிக்கோ நகரில் கூடியிருக்கும் வீரர்கள் யாவரையும் ஆசீர்வதித்து, உலக சமாதானத்தின் ஊக்கத்தை பல திசைகளிலும் கொண்டுசெல்லும் தூதர்களாக விளங்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம். என்றார் பரிசுத்ததந்தை.

### விசேஷ ஆகாய விமானசேவை

கார்த்திகை மாதம் 21-ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடக்கஇருக்கும் துணை ஆயர் வந். எல். ஆர். அன்ரனி அடிகளாரின் அபிஷேகச்சடங்கில் பங்குபெற கொழும்பிலிருக்கும் பலர் விருப்பம் தெரிவித்ததன் பயனாக அன்று காலை $7\frac{1}{2}$ மணிக்கு யாழ்ப்பாணம் வந்து சேரத்தக்கதாக ஒரு விசேஷ விமானசேவை ஒழுங்கு படுத்தப் பட்டிருக்கிறது. அது காலை 6 மணிக்கு றத்மலானையிலிருந்து புறப்பட்டு யாழ்ப்பாணத்திலிருந்து அன்றுதினம் 5 மணிக்கு மீளவும் கொழும்புக்கு திரும்பும். இச்சேவையை உபயோகிக்க விரும்புபவர்கள் கொழும்பு அதி மேற்றிராணியார் இல்லத்தில் "புறக்குறேற்றர்" பதவியில் இருக்கும் குருவானவருடன் உடனே தொடர்பு கொள்ளக் கேட்கப்பட்டிருக்கின்றனர்.

### வட அயர்லாந்தில் சமயக் கலகங்கள்

அயர்லாந்து தேசம் ஒரு கத்தோலிக்க தேசமாய் இருந்தபோதிலும் வட அயர்லாந்து அப்படியல்ல. இப்பகுதி அயர்லாந்துதேச ஆட்சியின் கீழ் அடங்கியதன்று: பெரும்பாலானோர் புரொட்டஸ்தாந்து மதத்தினர். இவர்களுக்கும் கத்தோலிக்கர்களுக்குமிடையில் இடையிடையே பூசல்கள் ஏற்படுவதுண்டு. இவ்வகைக் கலகங்கள் அண்மையில் ஏற்பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன. ஆனால் அங்குள்ள சகல கிறிஸ்தவ சபைத் தலைவர்களும் ஒன்றுகூடி சமாதானத்தை விரைவில் நிலைநாட்டினதுடன் இப் பூசல்களுக்கு மூலகாரணமாய் இருப்பனவற்றை முற்றாக அகற்றிவிடவழிவகைகள் ஆராய்ந்துவருகின்றனர்.

## ஆங்கில கருதினாலுக்குப் பாப்பரசரின் நன்றி

அண்மையில் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்பர் வெளியிட்ட "பிறப்பு ஒழுங்கு" என்னும் நிருபத்துக்கு ஆங்கில கத்தோலிக்க திருச்சபையின்சார்பாக கருதினால் ஹீனன் தமது முழு ஆதரவையும் பாப்பரசருக்கு அறிவித்திருந்தார். பாப்பரசர் கூறுவதை அவரது அதிகாரத்துக்குரிய மரியாதையுடன் ஆங்கில கத்தோலிக்க மக்கள் வரவேற்கின்றனர் என்று கருதினால் கூறியிருந்தனர். இத்தகைய விசுவாசம் தமக்குப் பெரிதும் ஆறுதல் அளிக்கின்றதென்றும் ஆங்கில கத்தோலிக்க மக்கள் உலக சீவியத்தில் இலேசான முறைகளால் கவரப்படாது சீரான முறைகளைக் கையாள்வார்கள் என்பதில் தமக்கு முழு நம்பிக்கை உண்டு என்றும் பாப்பரசர் கருதினாலடிகளாருக்கு அறிவித்திருந்தார்.

## இலங்கை தொழிற் சங்க இயக்கம்

### பீற்றர்பிள்ளை சுவாமியாருக்குக் கடமைப்பட்டிருக்கிறது

சென்ற இருவாரங்களுக்கு முன் கொழும்பு அக்குவைனஸ் மண்டபத்தில் காலஞ்சென்ற பீற்றர்பிள்ளை சுவாமியாரின் மறைவின் நாலாவது வருட நிறைவை ஞாபகப்படுத்த ஒன்றுகூடிய இலங்கை அறிஞரின் கூட்டத்தில் இலங்கை சமசமாஜ கட்சித் தலைவர்களில் ஒருவராகிய திரு. பேனட் சொயிசா வணக்கத்துக்குரிய பீற்றர்பிள்ளை சுவாமியார் இலங்கையில் தொழிற் சங்கங்களை நிலைநாட்டுவதற்கு அடிப்படை வேலைகளைச் செய்து உதவிய பெரியாரெனவும், அவர் சமூகசேவை ஆராய்ச்சிக் குழுவினரில் ஒருவராகச் சேகரித்த பல புள்ளி விபரங்களை இன்றும் தொழிற்சங்க இயக்கத்தினர் உபயோகித்து வருகின்றனர் என்றும் கூறினார்: சுவாமியாரும் சமசமாஜ கட்சியினரும் பல கருமங்களில் கொள்கை மாறுபட்டவரெனினும், அவருக்கு உரிய நன்றியையும் மதிப்பையும் கொடுக்க என்றும் தயங்க மாட்டார்களெனவும் அவர் உறுதி கூறினார்.

### பாப்பரசரின் விருப்பத்துக்கு இணைய பூமிதான இயக்கம்

பரிசுத்த தந்தை தென் அமெரிக்காவுக்கு [illegible] செய்த பிரதான நோக்கங்களில் அங்குள்ள சமூக ஏற்றத்தாழ்வை ஓரளவு சமனாக்குவதும் ஒன்றாகும். அங்கு தங்கிய நாட்களில் அவர் அப் பிரதேச செல்வந்தர்களுக்கு இவ்வேண்டுகோளை விடுத்துள்ளார். அதன்படியே இப்போது பலர் தமக்கு மிதமிஞ்சி உள்ளதான நிலங்களை வறியவர்களுக்கு பங்கிடுசெய்கின்றனர். திருச்சபை அதிகாரிகளும் இதற்கு வழிகாட்டுகின்றனர். அண்மையில் சில்லிதேச மேற்றிராணியார் சான்செஸ் அடிகளார் தமக்குள்ள நிலபுலங்களில் 6000 ஏக்கர்களை வறியவர்களுக்கு பூமிதானம் செய்திருக்கிறார்.

## இஸ்லாமியரின் ஆன்மகொள்கைகளை பிரதமர் பாராட்டினார்

இஸ்லாமியரின் வேதநூலாகிய திருக்குர்ஆன் உலகுக்குஈந்தருளப்பட்ட 1400 வருட நிறைவு தினத்தை உலகின் பலபாகங்களிலுமுள்ள இஸ்லாமிய மதமக்கள் அண்மையில் கொண்டாடினர், இலங்கையிலும் இஸ்லாமியமக்கள் இருக்கும் பல இடங்களிலும் கொண்டாடப்பட்டது. இக்கொண்டாட்டங்களில் நமது பிரதமர் திரு. டட்லி சேனநாயகா பங்குபற்றிய சமயங்களிலெல்லாம் இந்நாட்டுமக்களின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்துக்கும் இஸ்லாமிய சமயகொள்கைகள் செய்துள்ள அரியசேவைகளை எடுத்துக்காட்டி, நமது நாடு மேலும் முன்னேற வேண்டுமானால் இங்குள்ள சகல சமூகத்தினரும் ஒற்றுமையாக வாழவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

கார்த்திகை

| | | | |
|---|---|---|---|
| 3 | ஞா. | பரி. ஆவி விழாவுக்குப் பின் 22-ம் ஞாயிறு | [ப] |
| 4 | தி. | புனித சார்ள்ஸ் | [வெ] |
| 5 | செ. | கிழமைப் பூசை | [ப] |
| 6 | பு. | ,, | [ப] |
| 7 | வி. | ,, | [ப] |
| 8 | வெ. | ,, | [ப] |
| 9 | 2 ச. | திரு மீட்பரின் பேராலய அபிஷேகம் | [வெ] |

சத்தியவேத
பாதுகாவலன்

1968-ம் ஆண்டு கார்த்திகை மீ 2-ந் உ

## ஒரு கருணைச் செயல்

இறந்தவர்களை நினைவுகூரும் வண்ணம் திருச்சபை ஏற்படுத்திய மாதமாகிய கார்த்திகையின் ஆரம்பத்திலிருக்கிறோம், திருச்சபை என்றும் தனது மக்களை மறப்பதில்லை. வாழ்விலும் சாவிலும் அவர்களுக்காக வேண்டுதல் செய்கின்றது. அத்துடன் இன்று உயிரோடிருக்கும விசுவாசிகளை மரித்த விசுவாசிகளுக்காக மன்றாடி அவர்களுக்குத் துணைபுரியும்படி தூண்டியும் வருகின்றது. அவர்களைப் பரிசுத்த ஆத்துமாக்கள் என்றும் உத்தரிக்கும் திருச்சபை என்றும் அழைக்கிறது.

இப்பரிசுத்த ஆத்துமாக்களுக்கு உதவுவது பிறர்சிநேகக் கிரியைகளுட் சிறந்தவொன்றாகும். ஏனெனில் தேவைப்பட்டோருக்குத் தேவைப்படும் வேளையில் செய்யப்படும் நன்மையே பெரிது. தமக்காக ஒன்றும்செய்யமுடியாத நிலையில், ஆனால் பெரும் வேதனைகளை அனுபவித்துக்கொண்டு எமது உதவியை எதிர்பார்த்திருக்கும் ஆத்துமாக்களுக்கு உதவிசெய்வது ஒருபெருங் கருணைச் செயலாகும். பிறரது துன்பங்களில் கருணைகாட்டாதவர் தாமும் அந்நிலையில் இருக்கும்போது பிறரால் மறக்கப்படுவர். ஆனால் தமது வாழ்நாளில் இறந்தவர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்காக மன்றாடி வந்தவர்களின் பெயரை தேவன் மறைந்துபோக விடமாட்டார். தமது சகோதரங்களுக்கு உதவிய அன்புச் செயலைக் கண்ட தேவன், அதற்குத் தகுந்த சம்பாவனையாக அவர்களது உத்தரிப்புஸ்தல வாசத்தைக் குறுகியதாக்குவார். அவர்களது உதவியைப் பெற்று பரலோகத்தை அடைந்த ஆத்துமாக்களும் நன்றிமறவாது மண்ணிலும் விண்ணிலும் அவர்களுக்குத் துணைபுரிவர். அவர்கள் மோட்சமடையுமுன்னரே தமது செபத்தின் மூலம் பலசகாயங்களைப் பெற்றுக் கொடுக்கின்றனரென அநேக வேதசாஸ்திரிகள் நம்புகின்றனர்.

இறந்தவருட் பலர் நண்பராக, உறவினராக இருக்கலாம். எம்மோடு வாழ்ந்து, எம் சுகதுக்கங்களில்பங்குகொண்டவராக இருக்கலாம். இன்றும் நாம் அவர்களது தொடர்பைத் துண்டித்துவிடாமல் அவர்கள்மீது கொண்ட அன்பின்காரணத்தால் இன்னும் பெரியசேவையை அவர்களுக்கு ஆற்றுவோமாக. ஆனால் எமது அன்பிற்குரியவர்களுக்காக மட்டுமல்லாமல் சகல ஆத்துமாக்களுக்காகவும் மன்றாடிவரல்வேண்டும். ஒருவரது உதவியுமின்றித் தவிக்கும் எத்தனையோ ஆத்துமாக்களுக்கு அதுபெருந் துணையாக இருக்கும்.

## உத்தரிப்புஸ்தல ஆத்துமாக்கள் தினம் — பி. சவரிமுத்து

விசுவாசிகள் சகலரையும் திருச்சபை என்று பொதுவாக நாம் கூறியபோதிலும் அவர்களில் மூன்றுபிரிவினர் உண்டு. (1) உலகில்வாழும் விசுவாசிகள் — இவர்களைப் "போர்புரியும் திருச்சபை" என்று குறிப்பிடுகிறோம. (2) உத்தரிப்பு ஸ்தலத்தில் வேதனைப்படும் ஆத்துமாக்கள் — இவர்களைப் "பாடுபடும திருச்சபை" என்றுகுறிப்பிடுகிறோம். (3) பரலோகத்தில் ஆனந்தத்துடன் காணப்படும் பரிசுத்தர்கள் —இவர்களை "வெற்றியடைந்த திருச்சபை" என்று குறிப்பிடுகிறோம்.

இம்மூவகையினருக்குமிடையில் ஒரு நெருங்கிய தொடர்புண்டு. பெரும்பாலான விசுவாசிகள் உத்தரிப்பு ஸ்தலமென்னும் இடைக்கால — தற்காலிக வாழ்க்கையான — நரகாக்கினைக்கு ஒப்பான கொடியவேதனையை அடைந்த பின்பே பரலோகத்திற்குச் செல்கின்றனர். விசுவாசிகள் சகலரும் இப்பூவுலகில் தாம சீவந்தராயிருந்தபோது தாம் தேவனுக்கெதிராகச் செய்த பாவங்களுக்குப் பரிகரிப்புச் செய்யவேண்டியவர்களாயிருக்கின்றனர். தேவனுடைய கோபத்தைச் சாந்திப்படுத்தி அவருடைய நீதியைத் திருப்திப்படுத்த வேண்டியவர்களாயிருக்கின்றனர். அதன்பின்தான அவர்கள் சுத்தவாளரின் சபையில் மோட்சத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

இவ்வுண்மையை நன்குணர்ந்த எமது மாதாவாகிய கத்தோலிக்க திருச்சபையானது, நாளாந்தம் பூசைப்பலிவேளையில் இதற்காக விசேஷவிதமாக மன்றாடிவருகிறது. உத்தரிப்புஸ்தல ஆத்துமாக்களின நித்திய இளைப்பாற்றிக்காக — அவர்களுடைய பாவ மன்னிப்புக்காக — முடிவில்லாத பிரகாசமான சமாதானத்துக்காக — துக்கப் பூசைகளை ஒப்புக்கொடுத்துக்கொண்டு வருகிறது. உலகில்வாழும் மக்களை மரித்தோருக்காக மன்றாடும்படி ஊக்கித்து வருகிறது. இதற்காகக் கார்த்திகைமாதம முழுவதையும் ஒதுக்கிவைத்திருக்கிறது எனலாம். இறந்தோருக்காக மன்றாடும் வழக்கம திருச்சபையில் ஆதிகாலந்தொட்டு இருந்து வந்திருக்கிறது என்று நாம் வேதாகமத்தில் வாசித்தறியக் கூடியதாயிருக்கிறது.

மக்கபீஸ் ஆகமத்தில் யூதாஸ்என்பவன் 12,000 வெள்ளி நாணயங்களைச் சேர்த்து மரித்தோரின பாவமன்னிப்புக்காகப் பலிஒப்புக்கொடுக்குமாறு ஜெருசலேம் பட்டணத்துக்கு அனுப்பிவைத்தானென்று கூறப்பட்டிருக்கிறது. ஆதிகாலம தொட்டே இறந்தோருக்காகச் செபிப்பது ஒரு பரிசுத்தமும் பிரயோசனமுமான செயலென்று எண்ணப்பட்டு வந்திருக்கிறது (2மக்கபீஸ் 12, 43—46). இவ்வாறு மரித்துப் போன எமது பெற்றார், உற்றார், உறவினர், சகோதரர், சகோதரிகள், கணவன், மனைவி, புத்திரர், புத்திரிகளாகிய சகலருக்கும் மன்றாடுவது நல்ல வழக்கம் மாத்திரமன்றி எமது நன்றிக்கடனாகவும் இருக்கிறது என்பதை நாம மறத்தலாகாது. அவர்கள் இவ்வுலகில் வாழ்ந்துவந்த காலத்தில் எங்களுக்காக எத்தனைபாடுகளைப் பட்டிருக்கிறார்கள்? எவ்வளவு பரித்தியாகங்களைச் செய்திருக்கிறார்கள்? அல்லும் பகலும் அயராது உழைத்து எங்களுக்கு அவர்கள் பல உதவிகளைச் செய்யவில்லையா? காலைதொட்டு மாலைமட்டும் நெற்றி வியர்வை நிலத்தில்சிந்த அரும்பாடுபட்டு எங்களை அவர்கள் பராமரிக்கவில்லையா? எங்களுக்கேற்பட்ட துன்பதுரித வேளைகளில எங்கள் பக்கலில் இருந்து எங்களுக்கு வேண்டிய உதவிகளைச்செய்து அவர்கள் ஆறுதல் அளிக்கவில்லையா? எங்களைத் தங்கள் கண்ணின் மணிபோலப் பாதுகாத்து வரவில்லையா அவர்கள்?

இவ்வகைப்பட்ட பற்பலநன்மைகளை நாங்கள் பெற்றும், அவர்கள் இறந்தபின் அவர்களுடைய இளைப்பாற்றிக்காக மன்றாடாதிருப்பது நன்றிகேடல்லவா? கிறீஸ்துவின் அடிச்சுவட்டைப் பின்பற்றும் எங்களுக்கு இது எங்கள் கடமையல்லவா? "உன்னைப்போல் உன் புறத்தியானையும் நேசி" என்று கூறிய எமது இரட்சகர் எங்கள் மரித்துப்போன பேருபகாரிகளைப்பற்றி என்னதான் குறிப்பிட்டிருப்பார்? இதை அவர் கூறாமலே நாம் உணரவேண்டிய விஷயமல்லவா? அவர்களுடைய அழுகைக்குரலை நாங்கள் கேட்காதவர்கள்போல வாழ்வது பொருத்தமா? தகுதியா? இவ்வாறு "சும்மா" வாழ்வதா நாங்கள் அவர்களுக்குக் காட்டும் கைம்மாறு?

இதன் அகத்தியத்தை வற்புறுத்தும் நோக்கமாகவே திருச்சபையானது தனது பூசைப்பலிவேளையில் தினமும் விசேஷமாக எழுந்தேற்றத்தின்பின் "மரித்தோருடைய ஞாபகம்" என்ற மனவுருட்சிக்குரிய மந்திரத்தை ஓதி வருகிறது சீவியர்களுக்கும், மரித்தவர்களுக்குமாக மன்றாட்டங்களை ஒப்புக்கொடுத்து வருகிறது. சீவியர்களுக்காக மன்றாடும் வேளையில்... "இப்படியே இந்தப் பீடத்திலே பங்குபற்றுவதினால் தேவரீருடைய சுதனின அதிபரிசுத்த சரீரத்தையும், இரத்தத்தையும் உட்கொள்ளுகிறவர்களாகிய நாங்களெல்லாம் சகலபரலோக ஆசீர்வாதங்களாலும் வரப்பிரசாதத்தினாலும் நிரப்பப்படுவோமாக. எங்கள் ஆண்டவராகிய கிறீஸ்துநாதர்தாமே காரணகாட்சியாக" என்று செபித்தபின், குருவானவரும் விசுவாசிகளும் சேர்ந்து தொடர்ந்து, "மேலும் ஆண்டவரே! விசுவாசத்தின் அடையாளத்தோடு எங்களுக்கு முன்சென்றுவிட்டவர்களும், சமாதான நித்திரையாய்ச் சயனித்திருக்கின்றவர்களும், தேவரீருக்கு அடிமைபூண்ட ஸ்திரி பூமான்களுமாகிய ...×...யும்...×யும் நினைத்தருளும்" என்று மிகவும் மனவருட்சிக்குரிய முறையில் மன்றாடிவருகிறது.

இவ்வாறு திருச்சபை தனது போதனையாலும் சாதனையாலும் நாம் இவ்வுலகைவிட்டு மறைந்துபோன இனபந்துக்கள், நண்பர்களுக்காக மன்றாடவேண்டுமென்று வற்புறுத்துவதை நன்குணர்ந்து உத்தரிப்புஸ்தல ஆத்துமாக்களுக்காக நாம் ஆவனசெய்ய வேண்டுமன்றோ. அவர்களுக்காக நாம் பூசைப்பலியை ஒப்புக்கொடுப்பதிலும் பார்க்கச் சிறந்தஉதவி இல்லைஎன்றே கூறவேண்டும். அதற்கடுத்ததாக எமது செபங்களும், தபங்களும் சிறந்த பயனுடைத்து நாம கொடுக்கும் தான தருமங்களும் (இறந்த) உத்தரிப்புஸ்தல ஆத்துமாக்களின் வேதனையைக் குறைத்து அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைக் கொடுக்க உறுதுணை புரியுமன்றோ.

R. I. P.

**அடக்கம்:** கதிர் நிறைந்தால் பயிர் தரையில் தட்டும். அதுபோல் அறிவு நிறைந்த மனிதனும் அடக்கமுடன் இருப்பான்.

**இறை ஆவிவருகையின் 22-ம்ஞாயிறு**

## திருச்செய்தி

[மத். 22: 15—21]

"இராயனுடையதை இராயனுக்கும்
இறைவனுடையதை இறைவனுக்கும்
செலுத்துங்கள்."

வஞ்சப் பரிசேயர் வன்மக் குணங்கொண்டு
வந்தெங்கள் நாயகன் யேசுவிடம்
மிஞ்சும் குறைகாண முன்வந்தா ரங்கோர்நாள்
மீட்பரின் மேன்மைகள் போற்றினரே.

போதகரே நீரும் பொய்யற்ற சத்தியர்
போற்றினேம் உம்திறம் ஏற்றினமே
நீதமுரைப் பவர் நேர்மை மிகுந்தவர்
நிச்சய மாக விளக்கிடுமே.

'மன்னவன் சேசாருக் கேற்ற வரியினை
மக்கள் செலுத்துதல் மாண்பாமோ?
என்ன இதில்நீதி எண்ணி யுரைத்திடும்'
என்று பரிசேயர் கேட்டனரே.

கேட்டவர் துர்மனம் கண்டனர் யேசுவும்
கெட்ட குணமுறை மூடர்களே
'காட்டும் வரிப்பணம்' என்றதும் அன்னவர்
காசினைக் காட்டினர் யேசுவிடம்

'நாணய ருபமும் நாம வெழுத்ததும
யாரைக் குறிப்பன' வென்றுரைக்க
'ஏன் ஐயம்? சேசாரின் ரூப வெழுத்' தென்றார்
ஏந்தலாம் யேசுவும் ஈதுரைத்தார்

'மன்ன னுடையதை மன்னனுக் கீந்திடும்'
மாறின்றி நீரும் வரிகொடுப்பீர்
'அன்னபடி தேவ அண்ணலுக் கேற்றதை
அன்புடனீந்திடும்' என்றுரைத்தார்.

### சிந்தனை

கர்த்தரின் நாளுக்குக் காத்திருக்கக் கடவோம். பொதுத் தீர்ப்புத்தினம்—கிறிஸ்துநாதரின் நாள்எனக் குறிக்கப்பட்டுளது.

கிறிஸ்துவர்கள் கிறிஸ்துவின் நாள்வரை பாவமின்றி நேர்மையுள்ளவர்களாகவும், நீதியின் கனிகளால் நிறைந்தவர்களாகவும் சீவிக்கவேண்டும்.

இறைவனைச் சேர்ந்தவைகளையும் உலகைச் சார்ந்தவைகளையும் நீதியின் வண்ணம் நடப்பித்தல் வேண்டும்.

—ஆசிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகளிர் மன்றம்

**மகளிர் மன்ற நேயர்கட்கு !........அஞ்சலி !........**

அன்று ஐப்பசித் திங்கள் 10-ந்தேதி, மாலை 5மணியளவில் ஆர்ப்பரித்தன நம் ஆசனக்கோவில் ஆலய மணிகள். "யாழ்நகர்க்கோர் துணை ஆயர்!...நம் பங்குக்குரவர் எல். ஆர். அன்ரனி அவர்கள் திருச்சபையின் இளவரசர்கள் வரிசையில்!..." என்ற சொற்றொடர்கள் தென்றலில் எதிரொலித்தன. மக்கள் யாவருமே மகிழ்வெய்தினர். புதிய ஆயர்க்கு தம் வாழ்த்துக்களைத் தெரிவித்து நின்றனர். நம் மகளிர் மன்றமும் இதோ தன் அளப்பிடற்கரிய மகிழ்ச்சியை நம் புதிய ஆண்டகை அவர்கட்குத் தெரிவித்து நிற்கின்றது.

அகல் விளக்கொளியே! எங்கள் அன்ரனி ஆயரேறே!......
ஆண்டகை எமிலியானுஸ் அவர்கட்கோர் அருந்துணையே!
சகலரும் புகழ்ந்து போற்றும் சிறப்புடை குணத்தின்குன்றே!...
சாந்தமேயுருவமான சற்குண வள்ளலேறே;......
அகிலமே ஆளுகின்ற அருமறைத் திருச்சபையின்
அதிகாரபீடந்தாங்கும் ஆயர்கள் வரிசையில்நீர்
மகிபனின் சித்தமதில் மாண்புடன் மலர்ந்துதோன்றும்
மதிப்புறு செய்திகேட்டு மகிழ்ந்தது மகளிர்மன்றம்;......

— ரோஜா

## துணை ஆயர் அன்ரனிக்கு ஜே! .....

**(ஊர்க்குருவின் செய்திச் சுருள்)**

கிச்!...கிச்!...கிச்!......

அன்றொரு நாள்!...காலையில் கண் விழித்ததுமே பரலோக அன்னையை நோக்கிக் கையெடுத்தேன். "ஏதாவது நல்ல நியூஸாக நாலு நியூஸ் கிடைக்கச் செய்திடு தாயே!...இல்லாட்டி என் தொழில்தான் என்னவது" என்று பிரார்த்தித்தேன். ஏன் தெரியுமா?......இரண்டு கிழமையாக ஊர்சுற்றிச் சுற்றி அலுத்துப்போனது தான் மிச்சம். அன்றைக்கும் யார் முகத்தில் விழிச்சேனோ!...ஒரு நியூசு மேயில்லை ரொம்பவும் "டிஸப்பொயின்ரட்" டாய்ப் போயிட்டேன் பாருங்க, மரக்கிளையொன்றிலே சோர்ந்து போய் உட்கார்ந்திட்டேன். சிட்டுக்குருவியொன்று பக்கத்தேவந்து உட்கார்ந்தது. "என்ன!...ஊர்க்குருவியாரே!......நலந்தானே!...என்றது. "ம்" என்றேன். என்ன "ம்" யாழ்நகரே குதூகலிக்கிறது புதிய ஆயர் நியமனத்தில். நீ என்னடா என்றால் "ம்" கொட்டறயே" என்று சேதி சொல்லிற்று. "புதிய ஆயரா?..." எதுவுமே புரியாமல் விழித்தேன். "ஆமாம்!...எங்கள் ஆசனக்கோவில் பங்குக்குரவர் எல். ஆர். அன்ரனி அவர்கள் யாழ்நகர்த் துணை ஆயராகி விட்டாராமே. நேற்று மாலை ஆசனக் கோவில் மணிகள் ஆரவாரித்தனவே சேதி சொல்ல..."அப்படியா சேதி" என்று சொல்லிக் கொண்டே இறக்கைகளை நீட்டிச் சோம்பல் முறிச்சேனோ?...அடுத்தகணம் குதிச்சேன் "பிஷப் ஹவுஸில்." "நீ யாரய்யா!. உள்ளே போகக்கூடாது...புதிய ஆயர் ரொம்ப பிஸியாயிருக்கிறார். குழப்பாதே... போ வெளியே" என்று மறிச்சார் வாச்சர்.

"ஆமா ஐயா!...ஆளைத் தெரியாது. ...சும்மா விடுமய்யா வழியை" என்று பொரிந்துவிட்டு தாவினேன் உள்ளே. புதிய ஆயர் உண்மையிலே "பிஸி தான்." வாழ்த்துக்கூற வந்தவர்கட்கு கையை நீட்டி நீட்டியே அலுத்துப் போயிருந்தார். கிச்!...கிச்!...என்றேன். திரும்பிப்பார்த்தார் புதிய ஆயர் அன்ரனி அவர்கள். "அது நம்ம ஊர்க்குருவி பாருங்க. "நீற்" கேட்டு வந்திருக்கும்" என்று சிரிச்சார் பாதுகாவலன் எடிட்டர். "போங்கய்யா சும்மா"!...என்று கூறிவிட்டு "மகளிர் மன்ற அக்காவினதும், மகளிர் மன்ற ரசிகர்களினதும், அடியேன் ஊர்க்குருவியினதும் இதயபூர்வமான நல்வாழ்த்துக்கள்" என்று கையெடுத்துக் கும்பிட்டேன். பெரிதாக ஒரு "தாங்யூ" போட்டார். அதோடு விட்டாரா? சமையலறைப்பக்கம் கையை நீட்டினார். தாவினேன் அங்கே. "கட்லெற்" ஒன்றைக் கொத்திக் கொண்டு பறந்தேன் வெளியே. கிச்!...கிச்!... கிச்!...

விண்ணிலே பறந்து கொண்டிருந்த என் காதில் செபமாலை ஒலியலைகள் வீழ்ந்தன. சுற்றிவர நோட்டமிட்டேன். ரொம்ப வெளிச்சமாக அந்த இருட்டிலும் பிரகாசித்தது ஓர் இடம். பாய்ந்து சென்ற எனக்கு அது பண்டத்தரிப்புப் "பத்திமாபதி" என்று கண்டுபிடிக்க அத்துணை நேரம்பிடிக்கவில்லை. ஐப்பசி மாதம் 13-ந்தேதி, பத்திமாபதியில் காட்சிதந்த பரம அன்னை புதுமைகள் மூலம் தம் காட்சிகளை ஸ்திரப்படுத்திய பொன்னாள். அதன் ஆயத்த தினத் திருவிழிப்பு விழா நடந்துகொண்டிருந்தது அந்த இரவிலே. பத்திமாபதிக் கோவிலை அலங்கரிக்கும் அந்த எழிலரசியின் சொரூபம் பக்தர்கள் நடுவில் அலங்காரமாக ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. நீலப்பட்டாடை அழகு செய்த பீடத்தின்மீதே வனப்புறு ரோஜாமலர்கள் பாதத்தை அழகு செய்ய, அரசிக்குரிய கிரீடம் அணிந்து கொலுவீற்றிருந்தாள் பரலோக பூலோக இராக்கினி. சுமார் ஆறடி உயரத்தில், கையில் செபமாலையை நீட்டியபடி பத்திமா மாதாவின் காட்சியே போன்றிருந்தது அந்த அன்னையின் தோற்றம். ஏறெடுத்துப் பார்த்துக் கொண்டேயிருந்தேன். என் இருகண்களுமே நீரைச் சொரிந்தன. ஆனந்தக் கண்ணீர் தான். நினைவுலகுக்கு மீண்ட நான் சுற்றிப்பார்த்தேனோ!...பக்தர்கள் அத்தனைபேரினும் விழிகளிலே கண்ணீரூற்று. கரங்களிலே அன்னையின் மணிமாலை. உதடுகளிலே செபமாலை ஓசை!..."காணக் கண்கோடி வேண்டுமம்மா!...உன் அழகை...பாடக் கவி ஆயிரம் வேண்டுமம்மா" என்று என் உதட்டில் ஒரு மெட்டு உருவாயிற்று. என் கவிதைத் திறமையை மெச்சி வியந்துகொண்டு பாய்ந்தேன் அறை வீட்டை நோக்கி. பங்குக்குரவரைச் சந்தித்தேன். "செபமாலைப் பக்தியை சோம்பிப் போயிருந்த நம் மனதிலே புத்துயிர்பெறச்செய்ய இத்திருநாளைக் கொண்டாட வழிவகுத்ததற்கு பெரிசாக ஒரு "தாங்யூ" போட்டேனோ!... மழை துமி, துமி யென்று துமித்தது; வானும் "இடி இடி" யென்று இடிச்சது. பறந்தேன் என் கூட்டை நோக்கி. கிச்!...கிச்!...கிச்!......

# பத்துக் கற்பனை

**கத்தோலிக்கநற்சிந்தனை என்றதலைப்பில் திரு. பி.சவரிமுத்து அவர்கள் இலங்கை வானொலியில் ஆற்றிய உரையைத் தழுவியது**

## பிறரின் உடலுக்கு ஏற்படக்கூடிய தீமைகளைத் தவிர்த்தல் 4

இறைவன் மக்களாகிய எங்களுக்கு உடலையும், ஆன்மாவையும் அவற்றின் பற்பலசக்திகளையும் இலவசமாக அளித்திருக்கிறார். இவற்றைக்கொண்டு ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு நாங்கள் இப்பூவுலகில் தேவனுடைய மகிமைக்காகவும், எங்களுடைய ஈடேற்றத்துக்காகவும் ஏற்றவாறு அவைகளைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதே அவரது திருச்சித்தமாயிருக்கிறது.

எங்களுக்குத் தேவனால் அளிக்கப்பட்ட உயிரை நாமோ வேறு எவருமோ அளிக்கக் கூடாதென்பது தேவனின் பிரதான கற்பனைகளுள் ஒன்றாக இருக்கிறது (5ஆம் கற்பனை).

நாங்கள் யாபேரும் எங்கள் உடலின் நலத்தை நன்கு கவனிக்கவேண்டும். அதன் உயிரையும் சுகத்தையும் நாம் பாதுகாத்து வரவேண்டும். ஏனெனில், கடவுள்தான் அதை எங்களுக்குக் கொடுத்திருக்கிறார். நம்உடலைத் துப்புரவாக நாம் வைத்திருக்கவேண்டும். நல்ல உணவு கொண்டு அதைப்போஷித்து நாம் வளர்க்கவேண்டும், தகுந்தஉடையால் அதை உடுத்தவேண்டும். அந்த உடலுக்கு வேண்டிய பயிற்சியளித்து அதைவளரச்செய்து அதற்குவேண்டிய இளைப்பாற்றி, பொழுதுபோக்கு ஆதியனவற்றை அளித்துவரக் கடமைப்பட்டுள்ளோம். அது மட்டுமன்றிப் பிறருடைய உடலைச்சார்ந்த ஏழு இரக்கச் செயல்களை நாம் செய்யவேண்டுமென்று யேசுநாதர் சுவாமி வற்புறுத்தியிருக்கிறார். அவையாவன: (1) பசியாய்இருப்பவர்களுக்கு உணவுகொடுப்பது. (2) தாகமாய் இருப்பவர்களுக்குக் குடிக்கக் கொடுப்பது. (3) உடையில்லாதவர்களுக்கு உடைகொடுப்பது. (4) அகதிகளுக்குப் புகலிடம் கொடுப்பது. (5) சிறையில் இருப்பவர்களைக் காணச் செல்வது. (6) நோயாளரைச் சந்திப்பது (7) இறந்தவர்களை அடக்கம் செய்வது.

நம் உடல்நலத்தை நாம் அசட்டை செய்வதும், முக்கிய காரணமின்றி அதை ஆபத்துக்குள்ளாக்குவதும் பாவம் ஆகும். இன்னும் தக்க காரணமின்றித் தன் உயிருக்கு ஆபத்தான செயலில் துணிந்து ஈடுபடுவது அதிக தீமையாகும். தன் உடலுக்குச் செய்யக்கூடிய மற்றெல்லாப் பாவங்களில் மிகக்கூடிய பாவம் தன்சொந்த உயிரை மனம்பொருந்தி, முழுஅறிவு அவதானத்துடன் மாய்த்துக்கொள்வது. (தற்கொலை) கடவுளின் உரிமைகளை மீறுவதாகும். ஏனெனில் கடவுள் ஒருவரே வாழ்வுக்கும் சாவுக்கும் ஆண்டவர். தற்கொலைபுரிவது கடவுளுக்குத் தொடர்ந்து தொண்டுபுரிய மறுப்பதாகும். கிறீஸ்துநாதருடன் சேர்ந்து சுமக்கும்படி ஒருவனுக்குத் தேவன்கொடுத்த சிலுவையை அவன் எறிந்துவிடுவதற்கொப்பாயிருக்கிறது. மற்றவர்களுக்கும் தான் செய்யவேண்டிய கடமைகளை உதறித்தள்ளிவிடுகிறான். தன் குடும்பத்துக்குக் கஷ்டத்தையும் துயரத்தையும் கொண்டுவருகிறான். தன்னைத் தானே நரகத்துக்கு ஆளாக்கிக் கொள்ளுகிறான்.

பிறரன்பின் அவசியத்தைப் பரமன் எங்களுக்கு ஆணித்தரமாக வற்புறுத்தியிருக்கையில் ஒருவன் வேறொருவரின் —தன் சகோதரனின் உயிரைக் கொலை செய்தல் எவ்வளவு பாவத்துக்கிடமாய் இருக்கிறது. மக்களின் இரட்சணியத்துக்காக யேசுக்கிறிஸ்துநாதர்மனிதாவதாரம் எடுத்துப் பிறந்தார். அவர்களின் வாழ்வுக்காகத் தமது உயிரையே அர்ப்பணித்தார். தமது பிறரன்பின் சின்னமாகப் பல புதுமைகளைச் செய்தார். [illegible] உயிர்ப்பித்தார். அவர் [illegible] செய்ய நாம் என்ன துணிவோடு பிறரைக் கொலைசெய்ய எத்தனிப்போம்? அப்படிச் செய்வது பெரிய பாதகமாயிருப்பதுமன்றி, அச்செயலைச் செய்பவன் பெரியஒரு சாவான பாவத்தையும் கட்டிக்கொள்ளுகிறான். கடவுள் சிருஷ்டித்துப் பாதுகாத்து வரும் எமது சகோதரரின் உடலை நாம் கொல்லுதல் தேவனுடைய சித்தத்துக்கு ஒவ்வாத பெரிய துரோகமாயிருக்கிறது. நாம் இவ்வுலகில்வாழ எவ்வாறு ஆசிக்கிறோமோ அவ்வாறே பிறரும் ஆசிக்கின்றனர்என்பதை எம்மனத்தில் ஆழமாகப் பதித்துவைத்து அவர்களை வாழவிடவேண்டியது எமது அருங்கடனாக இருக்கிறது. அதுவே இறையன்பினதும், அதிலிருந்து உற்பத்தியாகும் பிறரன்பினதும் வெளி அடையாளமாயிருக்கிறது.

## யாழ்ப்பாண உளவியற்சங்கம்

சிலவருடங்களாக உருக்குலைந்திருந்த யாழ்ப்பாண உளவியற்சங்கம் சிலபிரமுகர்களின் அயரா உழைப்பின் பயனாக மீண்டும் புனருத்தாரணம் பெற்றுச் செயலாற்றத் தொடங்கியிருக்கிறது. இச்சங்கத்தின் முதற் கூட்டம் புரட்டாதிமாதம் 23-திகதி யாழ்–மத்தியகல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. அத்தருணம் டாக்டர் ரீ. அருளம்பலம் M. B. B. S. D. P. M (லண்டன்) அவர்கள் "சௌக்கியம்" என்றோர் அரிய உபந்நியாசம் நிகழ்த்தினர். அக்கூட்டத்திற்குத் திரு. கே. பூரணம்பிள்ளை அவர்கள் தலைமைவகித்தார். உபந்நியாசத்தின் பின் புதிய அங்கத்தவர்கள் சேர்க்கப்பட்டுச் சங்க உத்தியோகஸ்தர்கள் தெரிவு நடைபெற்றது.

**போஷகர்கள் :**

i திரு. எஸ். தணிகாசலம்
(வடமாகில கல்வியதிகாரி)

ii திரு. ரீ. முருகேசபிள்ளை
(யாழ்மாவட்ட உதவி அரசாங்க அதிபர்)

iii டாக்டர் எஸ். இராசரத்தினம்
(வடபகுதி வைத்தியாதிகாரி)

**தலைவர் :**

திரு. கே. பூரணம்பிள்ளை

**உபதலைவர்கள் :**

டாக்டர் ரீ. அருளம்பலம்
(மனநோய் வைத்திய நிபுணர்)

திருமதி ஜீ. ஈ. எஸ். செல்லையா

திரு. ஈ. சபாலிங்கம்

**காரியதரிசி :** திரு. பி. சவரிமுத்து

**தனாதிகாரி :** திரு. கே. ஜெயராசா

வேறு ஆறு அங்கத்தவர்கள் நிர்வாகக்குழுவினராகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இச்சங்கத்தின் அடுத்தகூட்டம் ஐப்பசிமாதம் 22-ந்திகதி சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. அத்தருணம் திரு. பி. சவரிமுத்து M. A. (லண்டன்) அவர்கள் "மனத்தொல்லைகளை எவ்வாறு அகற்றலாம்" என்றொரு சிறந்த சொற்பொழிவாற்றினார். இக்கூட்டத்திற்குப் பலஅங்கத்தவர்கள் சமூகமளித்திருந்தனர்.

இக்கூட்டம் ஒவ்வொரு மாதமும் நடைபெறவிருப்பதாகவும், வைத்தியர்கள், ஆசிரியர்கள், ஏனைய பிரமுகர்கள் உட்பட 30பேருக்குமேல் தற்போது இச்சங்கத்தில் அங்கத்துவம் வகிப்பதாகவும் அறிகின்றோம்.

—விசேஷ நிருபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவகுமாரன்

வண. பிதா வே. அன்ரனி ஜோண்

கிறிஸ்து தேவகுமாரன் எனவும் அழைக்கப்பட்டார். புனித மத்தேயுவும், மார்க்கும், லூக்காசும் யேசுவை 31 முறை இந்தப் பெயரால் தங்களுடைய நற்செய்தி ஏட்டிலே அழைக்கிறார்கள். அரேமிய மொழியிலே தேவகுமாரனுக்கு "வென் எலோகிம்" (Ben-Elohim) என்று பெயர். "தேவகுமாரன்" என்ற சொல்லுக்குப் பல கருத்துக்களைப் பல மக்களும் பல நாட்டினரும் கொடுத்துள்ளனர். இச் சொல்லின் கருத்தை ஆராய்ந்து பார்ப்போம்.

## பல நாட்டினர் கூறும் கருத்துகள்

**கிரேக்க மக்கள்** அதிசயங்களும், அற்புதங்களும், புதுமைகளும் செய்கிறவரைத் தேவகுமாரன் என அழைத்தனர்.

**எகிப்திய நாட்டினர்** எல்லா அரசர்களையும் தேவகுமாரன் எனக் கூப்பிட்டனர்.

**உரோமை சாம்பிராச்சியத்திலே** சர்வாதிகாரிகளும், தளபதிகளும் தேவகுமாரன் என கூறப்பட்டனர்.

பழைய உடன்படிக்கையிலே தேவகுமாரன் என்னும் சொல்லுக்குப் பல கருத்துக்கள் வழங்கப்பட்டன. தேவகுமாரன் எனத் தெரிந்தெடுக்கப்பட்ட இஸ்ருயேல் மக்கள் அழைக்கப்பட்டனர். அரசர்களுக்கும், தேவதூதர்களுக்கும், நீதிபதிகளுக்கும், தலைவர்களுக்கும், நீதிமான்களுக்கும் இச் சொல் பாவிக்கப்பட்டது. வரப்போகும் மெசியாவுக்கும் இச் சொல் வழங்கப்பட்டது. எபி. 1:5; சங். 2:7 ஆகியவைகளைப் பார்க்கவும்.

## நற்செய்தியில் இச்சொல் எப்படிப் புகுந்தது ?

பல்ற்மன் (Bultman) என்னும் மறைநூல் அறிஞரின் கூற்றின்படி கெளனிஸ்றிக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்து புதுமைகள் செய்தபடியால் இச் சொல்லை வழங்கினூர்கள் என்று கூறுகிறூர். இவருடைய கூற்றை நாம் மறுக்கலாம், ஏனெனில் எமக்கு ஆதாரம் உண்டு. புனிதர்களான மத்தேயுவும், மார்க்குவும், லூக்காசும் எழுதிய நற்செய்தி ஏடுகளை நன்கு அலசிப் பார்க்கும்பொழுது ஆண்டவர் செய்த அற்புதங்களையோ, புதுமைகளையோ குறித்து அவரைத் "தேவகுமாரன்" என்று அழைக்கவில்லை. ஆனல் கிறிஸ்து **பிதாவின் சித்தத்துக்கு அமைந்து கீழ்ப்படிந்து** செயலாற்றும்பொழுது "தேவகுமாரன்" என அழைக்கப்படுகிறூர். உ+ம். பிசாசு ஆண்டவரைப் புதுமை செய்யும்படி சோதிக்கிறுன். "நீர் தேவகுமாரனுய் இருந்தால் இந்தக் கல்லை அப்பமாக்கும்" (மத். 4, 3. லூக். 4:3). கிறிஸ்து புதுமைசெய்ய மறுக்கிறூர். மறுத்து தாம் எந்தவிதமான தேவகுமாரன் என விளக்கம் கூறுகிறூர். உலகம் நினைக்கிறபடி புதுமை செய்து, அற்புதங்கள் புரிந்து தேவகுமாரனுய் வர நான் விரும்பவில்லை. ஆனல் **பிதாவுக்கு அமைந்து** அவருடைய ஆணையை நிறைவேற்றுவதிலே தேவகுமாரனுய் வருகிறேன் என யேசு கூறுகிறூர். "மனிதன் அப்பத்தினுல் மாத்திரம் சீவிக்கவில்லை; (புதுமைகள், அற்புதங்கள்) ஆனல் இறைவனின் ஒவ்வொரு வார்த்தையினுலும் (கடவுளின் சித்தம், தாழ்ச்சி, கீழ்ப்படிதல்) சீவிக்கிறுன்".

கிறிஸ்து "தேவகுமாரன்" புதுமைகள் அற்புதங்கள் புரிவதால் அல்ல; ஆனல் இறைவனின் சித்தத்துக்கு அடிபணிந்து குறிப்பாகத் தமது **பாடுகளிலே** தேவகுமாரனுய் விளங்குகிறூர். யேசுவின் பாடுகளினதும் துன்பங்களின் மத்தியிலேயும், அண்மையிலேயும், சூழ்நிலையிலேயும் இச்சொல் பாவிக்கப்படுகிறது. செசாரியா பிலிப்பில் பேதுருவானவர் கிறிஸ்து "தேவகுமாரன்" என்று வெளிப்படையாகக்கூறுதல் (மத்தேயு 16:16). சிலுவையில் ஆண்டவர் மரித்த விதத்தைக் கண்ட செந்தூரியன் கூறுகிறுன்: "இவர் உண்மையாகவே தேவகுமாரன்". யேசுவின் மறுரூபமான நேரத்தில் கிறிஸ்து "தேவகுமாரன் என அழைக்கப்படுதல். கிறிஸ்துவின் திருமுழுக்குநேரத்தில், "இவரே நமது பிரிய குமாரன்" என்ற விண்ணகக்குரல் ஆகிய சந்தர்ப்பங்கள் எல்லாம் கிறிஸ்து தேவகுமாரன் எப்படி? புதுமைபுரிவதால் அல்ல ஆனல் பிதாவுக்கு அவருடைய ஆழ்ந்த தாழ்ச்சியிலும்; பிதாவுக்கும் சுதனுக்கும் இடையேயுள்ள நெருங்கிய தனி உறவிலேயும் உண்டு என்பதைக் காட்டுகிறது. பிலாத்து யேசுவைப் பார்த்து: "நீர் தேவகுமாரனே?" என வினவினுன். ஆண்டவர் அவனுக்கு என்ன கூறினூர். "நீரே அப்படிக்கூறுகிறீர்." பிலாத்து, நீர் நினைக்கிறபடி, உலகநீதியின்படி, புதுமை செய்கிறபடியால் உலகும் கூப்பிடும், நீர் அழைக்கும் "தேவகுமாரன் நான் அல்ல என்று பிலாத்துவின் தப்பான எண்ணத்தைக் களைந்து தான் உயர்ந்த தேவகுமாரன், இறைவனின் சித்தத்தை நிறைவேற்றும் தேவகுமாரன், மக்களுக்காகப் பாடுபடும் தேவகுமாரன் என விளக்கம் கூறுகிறூர் கிறிஸ்து.

தேவகுமாரனைத் துதித்திடுவோம்; அவரின் அன்புப் பணியைப் பறைசாற்றிடுவோம்.

---

## வாக்காளர் இடாப்புகள்

1968ஆம்ஆண்டுக்குரிய பாராளுமன்ற பொதுத்தேர்தலுக்கான வாக்காளரின் பிரதிஇடாப்புகள் தயாராய் உள்ளனவென்றும், அவைகள் பரிசீலனைக்குக் கிடைக்குமென்றும் தேர்தல் அதிகாரிகள் அரசியற்கட்சிகளின் சகல தலைவர்களுக்கும் அறிவித்திருக்கிறூர்கள். 1968ஆம்ஆண்டுக்கான தேர்தல் இடாப்புகளே அடுத்தபொதுத்தேர்தலுக்கு உபயோகிக்கப்படும்போல் இருக்கிறது. வாக்காளரைப் பதிவுசெய்ததில் ஏற்பட்டுள்ள தவறுகளை எடுத்துக்காட்டுவதற்கு இச்சந்தர்ப்பத்திலே கட்சிகளின்பிரதிநிதிகளுக்கு ஒருசாவகாசம் அளிக்கப்படுகிறது. அதனுல் கிராமசேவகர்கள் அவசியமென்று காணுமிடத்து வேண்டியதிருத்தங்களைச் செய்யக்கூடியதாயிருக்கும்.

## தங்கப்பதக்க பரிசுகள்

அடுத்துநிகழும் 1969ஆம்ஆண்டில் தெரிவுசெய்யப்படும் விவசாயமன்னர்களுக்கு அரசாங்க பசளைக்கூட்டுத்தாபனம் தனதுஆதாயத்தில் 1,77,000 ரூபாவைப் பரிசுகளாக வழங்கவிருக்கிறது. ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவிலும் விவசாயமன்னராகத் தெரிவு செய்யப்படுவாரில் முதல்மூவருக்கும் முதலாம், இரண்டாம், மூன்றும் பரிசுகளாக முறையே 750ரூபா, 300ரூபா, 100ரூபாவழங்கப்படும். இவைகள் தவிர, அரசாங்க[illegible] களில் 85,000[illegible] கப் பகிர்ந்தளிக்கப்படும். மேலும் 22 மாவட்டங்களினதும் விவசாயமன்னருக்கு 22தங்கப்பதக்கங்களும் வழக்கப்படும். இவற்றிற்கென 7,000ரூபா செலவாகும்.

## அதிகமாமிச உணவு

இலங்கையிலுள்ள மக்களின் மாமிச உணவுவிகிதம் கடந்த பதினுன்குவருடங்களிலும் மும்மடங்காக அதிகரித்திருப்பதாய்க் கண்டறியப் பட்டிருக்கிறது. தற்பொழுது ஓர்ஆண்டிலே ஆள்ஒன்றுக்குச் சராசரிவீதமாகச் [illegible] மாமிச உணவு 18ருத்தல். [illegible] விகிதம் 1954ஆம்ஆண்டில் 5·42ருத்தலாயிருந்தது.

---

திருமதி எலிசபேத் கிறகோரியின்

### தேகவியோகம்

யாழ்ப்பாணம் பெரியதபாற்கந்தோரிலே பலவருடகாலம் ஆராய்ச்சியாராகக் கடமையாற்றிப் பலராலும் நன்கறியப் பெற்றுவந்து இளைப்பாறியிருந்தவரான திரு. ஏ. கிறகோரிஅவர்களின் பாரியாரான திருமதி எலிசபேத் சிலகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்து அந்தியதேவதிரவியானுமானங்களை நல்லறிவுடன் பெற்றுச் சென்ற 24ஆம்தேதி வியாழக்கிழமை மாலை அமைதியாக மரணத்திரையில் மறையலாயினர். மரிக்கும்போது இவருக்குவயது 80.

இவர் பொறுமை, தயை, பிறர்சிநேக முதலாம் புனிதகுணங்கள் உடையவராய் உறவினருக்கும், அயலகத்தாருக்கும் ஆறுதலியாயிருந்து எல்லோராலும் அன்பு பாராட்டப்பெற்று வந்தார். அரசாங்க புகையிரதப்பகுதியில் உத்தியோகம் வகித்திருந்து சிலவருடங்களுக்குமுன் காலஞ்சென்ற திரு. ஜி. ஏ. இம்மனுவேல் இவரின் ஏகமைந்தனுவர். இவருக்கு ஐந்து பேரப்பிள்ளைகள் உள்ளனர். இவரின் பிரேதசேமமானது மறுநாள் சாயந்தரம் பெருந்திரளான இனசனர், சிநேகிதர், அபிமானிகள் சமுகமாகச் சேமக்காலை கொண்டுசென்று அங்கே பரிசுத்த அடைக்கலமாதாகோவில் பங்குக்குருவர் வண. என். யோசெவ்சுவாமியார் அந்திம திருச்சடங்குகள் நிறைவேற்றிக் கடைசி ஆசீர்வாதம் கூறிநிற்கச் சிறப்பாக நடந்தேறியது. இவரது மரணத்தையிட்டு அனுதாபச்செய்தி அனுப்பியவர்களில் திருகோணமலை துணைமேற்றிராணியார் பி. தியோகுப்பிள்ளை ஆண்டகையும் ஒருவர். தமது மனைவியை இழந்து துயருறும் நாயகருக்கும், மற்றேனையோருக்கும் எமது அனுதாபமும் உரியதாகுக.

R. I. P.

---

செல்வக் குழந்தை செபரெட்ண தேவி

அவர்கள்

அமரத்துவமடைந்த

### 5-ம்வருட நினைவு நாள்

தோற்றம்: 6-5-55. மறைவு: 3-11-68

மண்ணில்நின்று மறைந்தாலும் எங்கள் எண்ணம்விட்டு அகலாத அன்புத்தேவியின் ஆன்மசாந்திக்காகப் புளியந்தீவு புனித மரியநாயகி தேவாலயத்தில் திங்கட்கிழமை (4-11-68) காலை 5-15மணிக்கு ஒரு துக்கப்பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்படும்.

இரக்கமுள்ள யேசுவே
இக்குழந்தையின்பேரில் இரக்கமாயிரும்.

சிரேஷ்ட புதல்வியை இழந்துநிற்கும்
பெற்றேர்:
எஸ். ஜி. கிறகோரி, ஆர்தம்மா
சகோதரர்:
கிறிஸ்ரோபர் ஜெறேம், யூலியாஞதயாளகுமாரி, லோறன்ஸ் யோன்சன், பீலிக்ஸ் செபரெட்ணம், சேவியர் தனிநாயகம், கிறிஸ்ரபெல் ரஞ்சனி.

இலக்கம் 48,
2ஆம் லேக்ரேட்,
மட்டக்களப்பு. 172-68

---

மரியப்பிள்ளை முத்துக்குட்டி

அவர்கள் மறைவின்

### முதல் வருட நினைவு

மறைவு: 4-11-67

"சீவியத்தில் நேசித்தவர்களே,
மரணத்திலும் மறவாதீர்கள்."

இவ்வுலகைவிட்டுப் பிரிந்தும் எங்கள் மனதில்நின்றும் நீங்காத மரியப்பிள்ளை முத்துக்குட்டிஅவர்கள் மறைந்த முதல் ஆண்டு இம்மாதம் 5-11 68இல் நிறைவுறுவதால் அன்றுகாலை 6மணிக்கு பரிசுத்த அடைக்கலநாயகி தேவாலயத்தில் துக்கப் பாடற்பூசை நிறைவேறும். இதனைக் கண்ணுறும் இனசனர், அனுதாபிகள் அன்று தினம் அவவின் ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்றுடும்படி தயவாய்க் கேட்கின்றேம்.

இவவின் பிரிவால் துயருறும்:
கணவர், மகன், மருமகள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உற்றூர், உறவினர், நண்பர்கள்.

14, 4ஆம் குறுக்குவீதி,
யாழ்ப்பாணம்.

---

திரு. எஸ். யோசேவ் இராசதுரை

(முன்னுள் பெரியவிழான் தலைமைக்காரர்)

அவர்களின்

### 4-ம் வருட ஞாபகம்

பிறப்பு: 1-2-1915. இறப்பு: 9-11-1964.

**நாலாண்டு காலமோ பறந்த போதும்**
**நாங்களுமை நெஞ்சினிலே மறக்கவில்லை**
**பாலோடு தேனுக வாழ்ந்தகாலம்**
**பனிபோலப் போனதெனக் கவலையானேம்**
**மேலோகம்வந்தடியோர் ஒருநாள்காண்போம்**
**மெய்யிறைவன் எங்களரும் செபங்கள் கேட்டு**
**காலாதி காலமாய்த் தூயோர்க்கென்றே**
**காத்துவரும் மோட்சத்தை யளிப்பார் தானே.**

நித்திய இளைப்பாற்றியை இறைவன்
அவருக்கு அளிப்பாராக.
சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

இவரின் மறைவுகுறித்து 9-11-68 புதன்கிழமை காலை இளவாலை திருக்குடும்ப கன்னியர்மடத்திலும், 6-11-68-ல் பெரியவிழான் யுவானியார் கோவிலிலும் துக்கப்பாடற்பூசைகள் ஒப்புக்கொடுக்கப்படும். இதனைக் கண்ணுறுவோர் இவருடைய ஆன்மஇளைப்பாற்றிக்காக மன்றுடும்படி தயவாய் வேண்டுகின்றேம்.

மனைவி: செசிலியா மனேன்மணி
மக்கள்: ஜெயராணி, மல்லிகாராணி, மன்மதன், மனேகரன், இன்பம்.
தாயார்: சு. எலிசபேத்
சிறியதந்தை: அ. செபஸ்தியாம்பிள்ளை
சகோதரர்: சிசில் வில்லவராயன்
மருமக்கள்: வஸ்தியாம்பிள்ளை சேவியர், பிறின்சிலி, மனுவேற்பிள்ளை.
பேரப்பிள்ளைகள்: மங்களா, பிரேமளா, பூமளா, செல்வமகன்.

173-68

---

### நன்றித்துதி


அர்ச். யூதாததேயு, அர்ச். அந்தோனியார், அர்ச். சூசையப்பர் இவர்களிடம் நான் இரந்து கேட்டகருமம் அனுகூலமாயிற்று. எனது நன்றியைத் தெரிவித்து இதைப் பிரசுரிக்கிறேன். இவர்கள் நாமம் புகழப்படுவதாக. ஓர் அடியாள்

---

● அமெரிக்கா வருகிறமார்கழி அல்லது தைமாதத்திலே "அப்பொலோ-8" என்ற விண்வெளிக்கப்பலில் மூன்றுவானவெளிவீரர்களைச் சந்திரமண்டலத்துக்கு அனுப்பிவைக்க ஆயத்தப்படுகின்றது. இவர்கள் மறுபடியும் பூமிக்குத் திரும்புமுன் சந்திரமண்டலத்தை ஒருநாள்மட்டும் சுற்றிவருவதற்கான அணியடுக்கெல்லாம் செய்யப்பட்டுவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்சியின் காலமல்ல



**பாப்புவின் குரலொலி**

## திருச்சபையை நேசியுங்கள்

சென்றகிழமை அரங்கில் நாம்விடுத்த செய்தியாதெனில், "திருச்சபையைக் கட்டி எழுப்புங்கள்." இதைக் குறிக்கோளாகக்கொண்டு நாம் இந்தக்கிழமைப் புதினத்தை ஆரம்பித்துக் கூறுவதாவது? 'திருச்சபையை நேசியுங்கள்' திரும்பவும் ஒருமுறை வத்திக்கான் சங்கத்தை ஞாபகப்படுத்தி அதற்கிணங்க அது அளித்திருக்கும் பெரும் போதனைகளை த்தியானித்து, உற்சாகத்துடன் அனுசரிக்கப்படும் ஆண்டுகளைக் காணவே நாம் விரும்புகின்றோம். சிலர் வத்திக்கான் சங்கம் வெற்றி ஈட்டிவிட்டது என்று எண்ணுகிறார்கள். ஆனால் இவர்கள், திருச்சபை ஆடம்பரமாகச் சங்கத்திற் திட்டமிடப்பட்டவற்றை அறியாமல், கிளர்ச்சியுடன் சீர்திருத்துவோரைப்போன்று, இன்னும் மறுமலர்ச்சியை அழுத்துவதோடு நில்லாமல் புரட்சி உண்டுபண்ணுவதில் மூழ்ந்துநிற்கிறார்கள். இப்படிப்பட்ட புரட்சியை உண்டுபண்ணத் தங்களுக்கு அதிகாரம் உண்டென்று இவர்கள் எண்ணுகிறார்கள். இப்படியான மனப்போக்கினால் காலாகாலமாக உயிர் அளித்துவரும் திருச்சபைக்கும், பிரமாணிக்கக் குறைவுள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள். இவர்கள் திருச்சபையின் சட்டதிட்டங்களுக்கும், அதிகாரத்திற்கும் எவ்வளவுக்குக் குறைவாக இணங்குகிறார்களோ, அதற்கேற்ப அவர்கள் பெற்றுக்கொள்ளும் ஏவுதல்களும் இருக்கும். தற்போது திருச்சபையில் நிலவிவரும் மனப்போக்கு, வழக்கங்களோடு, சரசம் விளையாடுவதால் இவர்கள் போலித்தனமுடையவராகிறார்கள்.

## "அழிவை ஆக்கும் கண்டிப்பே இன்றைய நாகரிகம்"

கத்தோலிக்கரில் சில பகுதியினரிடம் அழிவைஆக்கும் கண்டிப்பே இன்றைய நாகரிகமாக இருக்கின்றது. உதாரணமாக இன்று வெளிவரும் வெளியீடுகள், சஞ்சிகைகள் திருச்சபை அதிகாரிகளுக்கு எதிர்மாறாகப் புதினங்களைப் பரப்புவதையே தொழிலாகக் கொண்டுள்ளது. இவர்கள் காலத்திற்குக் காலம் ஒரு சார்பினராய்ச் செய்திகளை வெளியிடுவதோடு அவற்றைச் சற்று மாற்றியும் கூட்டிக்குறைத்தும் தமது விருப்பிற்கிணங்க நஞ்சூட்டுகிறார்கள். இதனால இச்செய்தியை வாசிக்கும் வாசகர்கள் இக்கருமத்தைப் பற்றி அமைதியில் தீர்மானிப்பதற்குப் பதிலாக, திருச்சபையைச் சேர்ந்தவர்கள், அவர்கள் ஸ்தாபனங்கள், முயற்சிகள்மட்டில் நம்பிக்கையின்மை மதிப்பின்மையாகிய எதிர்மாறான எண்ணங்களை உருவாக்குகிறார்கள்.

இப்படியாகத் திருச்சபையின் சமுதாயத்தின்மட்டிலும், அதிகாரிகள்மட்டிலும் ஒவ்வோர் உண்மையுள்ள கத்தோலிக்கன் கொண்டிருக்கும் மரியாதை, உறுதி, பிணைப்பு முதலியவற்றிலிருந்து விலக, இவர்களது வாசகங்கள் தூண்டிவிடுகின்றது. இவ்விதமான செயல்கள் உண்மையான பூரணமான அறிவை உண்டுபண்ணவோ, அல்லது சகோதர அன்புடன் சீர்திருத்த வேண்டுமென்ற எண்ணத்துடனே ஏவப்படவில்லை. பதிலாக இவை பிரசித்திபெற்ற நிபுணர்களின் முரண்பாடான கீழான மனப்பான்மையாலும் ஆசாபாச நாட்டத்தினாலும் ஏவப்பட்டவையே. இத்தகைய செயல்கள் நல்ல கத்தோலிக்கரின் உள்ளங்களில் முரண்பாட்டையும், மனக்குழப்பத்தையும் உண்டுபண்ணுகிறது. உண்மையில் சில குருக்களும் பெரும்பாலான இளைஞர்களும் இவ்வகையான பரப்புதல்களால் பாதிக்கப்படுகிறார்கள்.

## கத்தோலிக்கர் சிலரின் உயர்வு தாழ்வு மனப்பான்மை

கத்தோலிக்கரில் சிலர் இன்று நிலவிவரும் இயக்கங்கள் எணணங்கள்மட்டில, தாம் கீழ்நிலையில் உள்ளனர் எனவும் விசித்திரமான கிலேச மனப்பான்மையுடனும இருக்கிறார்களென, ஒரு புரட்டஸ்தாந்து பிரபல்லிய சர்வகலாசாலைப் பேராசிரியர், எம்முடன் தனிமையில் பேசும்போது கூறியுள்ளார். இத்தகையோர் திருசசபையின பாரம்பரியம், வழக்கங்கட்கு எதிரானவற்றிற்கும், உலகப்போக்கிறகும், இணங்கத் தம்மை ஆக்கிக் கொள்ளுகிறார்கள். எனது எண்ணப்படி இப்படியான மனப்பானமை சுவிசேஷத்திற்கு அடுத்ததல்லவென்று அவர் சேர்த்துக்கூறினார்.

இன்னும் ஒற்றுமை இயக்கத்திற்கு மாறாக, உலகமடங்கலுமுள்ள தாறுமாறான முரண்பாடுகள, சமூகக்கலகங்களைப்பற்றி நாம் விடுத்துள்ள சுற்று நிருபத்தைத் தாக்கி, அணமையில் இரகசியமாய் ஒருமித்து ஆலோசித்து வெளியிடப்படும் உக்கிரகமான பட்சகாட்சிகளை அங்கீகரித்து; தேவாலயங்களிற் புகுதல்போன்ற கட்டுக்கதைகளைப்பற்றி என்னகூறமுடியும்? இப்படியான கிரிகைகளில் உண்மையான ஒரு கிறிஸ்தவனின் அனுசரிப்பும் மகத்துவமும் எங்கே? கத்தோலிக்க சமயத்தை வெளிப்படுத்துவதில் தனித்தாவது ஒருமித்தாவது இருக்கவேண்டிய பொறுப்புணர்ச்சி எங்கே? திருச்சபைமட்டில் இருக்கவேண்டிய அன்பு எங்கே?

## அப்போஸ்தொலிக்க அழைத்தல் கைவிடப்பட்டுள்ளது

கிறிஸ்துவைநாடித் தம்மைக் கத்தோலிக்கர் என அழைப்போரிடம, திருச்சபையின் அன்பு தணிந்துவிடவில்லையென நாம் இன்னும் எணணுகிறோம். இவர்கள் உண்மையில் கிறிஸ்துவைநேசிக்கவும், சுவிசேஷத்தைப் பின்பற்றவும் விரும்புவதாய் இருந்தால்; பிறர் அன்பைத் தழுவித திருச்சபையைநாடி வாழவேணடும். ஏனெனில், நாம் பிறரடையுடன் ஒருவரோடொருவர் தொடர்புகொண்டு ஒற்றுமையாய்த் தூயஆவியினால் தூண்டப்பட்டு வாழுவதிலே திருச்சபைதங்கியுள்ளது

இவ்விதமாகத் திருச்சபையை நாடுதல் இயற்கையான தூண்டுதல் என்பதை இனபகரமான செயல்களினால் வெளிக்காட்டவேண்டும். திருச்சபையின் மட்டிலுள்ள அன்பை, எவ்வளவாக நாம் விரும்புகிறோமோ அவ்வளவுக்குக் கத்தோலிக்கர் திருச்சபையைப் பரப்பும் உன்னதமான அப்போஸ்தொலிக்க அழைத்தற்சேவையிலிருந்து விலகிப்போவதைக்கண்டு கவலையடைகின்றோம். இன்னும் நாம் கூறுவதற்கு எதிராக, கசப்பாகக் கண்டிக்கும் பழக்கத்தினால் அப்போஸ்தொலிக்க வாஞ்சையை இழந்து சிலதருணங்களில் கடவுளின் திருச்சபையைப் பங்கப்படுத்தக்கூடிய தீமைகளையும் விளைவிக்கின்றார்கள். இங்கே கிறிஸ்துவின் வார்த்தைகள் எம சிந்தனைக்கு வருகின்றது. "ஒரு மனிதனுக்குச் சத்துருக்கள் அவன வீட்டாரே" (மத்தேயு 10-ம் அதி. 36-ம் வச.).

ஆனால், நாம் இப்பொழுது பிரமாணிக்கம உள்ள மக்களோடு பேசுகிறோம். உங்களில் எத்தனையோ மக்கள் தாழ்மையுடனும், திறந்த உள்ளத்துடனும், கிரிகையினாலும, எண்ணத்தினாலும் எமது அழைத்தலுக்குச் செவிசாய்த்து, திருச்சபையின் நலன் கருதுவதைக்கண்டு நாம் ஆனந்தங்கொள்ளுகிறோம். "திருச்சபையை நேசியுங்கள்." நேரம்வந்துவிட்டது திடமான மறுமலர்ச்சியுள்ள உள்ளத்துடன் திருச்சபையை நேசியுங்கள்.

## திருச்சபையின் இஷ்டமான பிரதிமை

நாம் மேற்கொள்ளவேண்டிய இடையூறு என்னவென்றால் ஞானக்காரியங்கள் மட்டிலுள்ள குருட்டுத்தன்மை. இது திருச்சபையின மனுஷீகத்தன்மையும் கொண்டுள்ளதென்றும், இது திடீரெனப் பூரணமாகத் திருத்தமடைந்து, இலட்சியங்களுடன துலங்கவேண்டுமென்று அடிக்கடி தன்னிஷ்டமான எண்ணத்தில் வேண்டிநிற்கிறது. இவ்வுலகில் திருச்சபையில் காணக்கூடிய சாயல், திருச்சபையின்மட்டில் உறுதியில்லாத ஆழமற்ற அன்புள்ளவர்களுக்கு, இடையூறுகளை உண்டுபண்ணலாம். நம சாதாரண அநுபவங்கள் வெளிப்படுத்தும் உலகத்திற்கடுத்த உண்மைகள், திருச்சபை அளித்துக் கொண்டிருக்கும பரிசுத்ததனத்திற்கும அழகிற்கும் எதிர்மாறாய் இருக்கும். இந்தக் குறித்த தருணத்திலேயே எமது அன்பு நிரூபிக்கப்படவேண்டும்.

எமது அயலார் எப்படிப்பட்டவர்களாய் இருந்தாலும் நாம அவர்களை நேசிக்கவேண்டியது எமது கடமை. எம்மிடம் அன்பு எவ்வளவிற்கதிகம் உண்டோ; அவ்வளவிற்கு எமது அயலான் பரிதாபமுள்ள நிலையில் கஷ்டப்படுவதை உணரமுடியும். திருச்சபையும் எமது அயலான். விசேஷமாக விசுவாச குடும்பத்தைச் சேர்ந்த உன்னதமான திருச்சபையை நாம் விரும்பி, முயற்சியுடன் நேசிக்கக் கடமைப்பட்டுள்ளோம். இந்த உண்மையானது திருச்சபையின் உறுப்பினரின், குறைமையில் சரித்திர சம்பந்தமானவற்றை வெளிக்காட்டும் அம்சத்தில நிலையூன்றி நிற்கிறது. இது திருச்சபையின் பரம இரகசிய உண்மைகளையும் வெளிப்படுத்தற் படிப்பினைகளையும, கிறிஸ்துவின் சந்நிதானம் முதலியவற்றையும், ஆழமாக விளக்குவதுமில்லை; விசுவாசத்தால் வெளிச்சமடைவதுமில்லை. இப்படியான வெளித்தோற்றம ஆழமற்ற அவதானம; திருச்சபை ஒரு தற்காலிகமான, மட்டுபபடுத்தப்பட்ட குறைவான மக்களையும் ஸ்தாபனங்களை

# மறுமலர்ச்சியின் காலம்

குற்றங்களையும், துர் அதிர்ஷ்டங்களையும் காணும்போது, எமது பிறரன்பு இன்னும காத்திரமுள்ளதும் திடாரிக்கமுள்ளதுமாய் இருக்கவேணடும. திருச்சபையில பிரமாணிக்கத்துடனும் மனரம்மியத்துடனும ஓர் அங்கத்தவனாய் வாழவிருமபுவோனின் நிலை இப்படியாய் இருக்கும். புனிதர்களினதும், சிறந்தபுத்திரர்களினதும் மனப்பான்மை இவ்வகையாக இருக்கவேண்டும்.

— வளரும்.

## பிரித்தானிய ஒலிபரப்பு ஸ்தாபனத் தலைவர்

### அயர்லாந்து இனக் கத்தோலிக்கர்

பிரித்தானிய ஒலிபரப்பு ஸ்தாபனத்தின் சரித்திரத்திலே அயர்லாந்து இனத்தைச் சேர்ந்த ஒரு கத்தோலிக்கர் முதன் முதலாகத் தலைவர் பதவிக்கு நியமனஞ் செய்யப்பட்டிருக்கிறார். இவரது பெயர் சாள்ஸ் குறுன். வயது 46 நிரம்பியவர். 21 வருட காலமாக பிரித்தானிய ஒலிபரப்புஸ்தாபனத்தில் உயர் உத்தியோகங்கள் பார்த்துவருகிறார், குறுன் அவர்கள் இங்கிலாந்துதேச கத்தோலிக்க ஒலிபரப்பு வேலைகளிலும் பெரும்பங்கு கொண்டவர்.

## இலங்கை சர்வசமய சங்கம் வாழ்வில் எளிமைகாண விரும்புகிறது

இலங்கையிலுள்ள பல சமயத்தவருமடங்கிய சர்வ சமய சங்கமானது அண்மையில் கொழும்புநகரில் தமது மூன்றுவது வருட மகாநாட்டை நடைபெற்றது. மகாநாட்டின்முடிவில் பிரதமமந்திரி திரு. டட்லி சேனநாயகா அவர்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவி சிறிமா பண்டாரநாயக்கா அமமையாருக்கும் அச் சங்கத்தினர் ஒரு விண்ணப்பம் செய்துகொண்டனர். நமது நாடு முன்னேறவேண்டுமானால் எமது மக்கள் தமது வாழ்வில் ஆடம்பரமற்ற எளிய; தூய வாழ்வைப் பின்பற்ற வேண்டுமென்பதே அவ் விண்ணப்பம். மகாநாட்டில் 17 உயரிய நோக்கமுள்ள பிரேரணைகள் கொண்டுவரப்பட்டன. அவை யாவும் மக்களின் வாழ்வுடன் நெருங்கிய சம்பந்தமுடைய வையே.

## இலங்கை கிறிஸ்தவ இளைஞர்

### ஒரு புதிய சபையை உண்டாக்க விரும்புகின்றனர்

சென்றவாரம் கொழும்பு சஞ். சூசையப்பர் கல்லூரி பொஞ்சின் மண்டபத்தில் சுமார் 1000 கிறிஸ்தவ இளைஞர் ஒன்றுகூடி இந் நாட்டில் அழிவுச் சக்திகளை அகற்றி ஒரு சிறந்த புதிய சக்தியை உண்டாக்கும் முறைகளை ஆராய்ந்தனர். அக் கூட்டத்தில் சமுகம் அளித்த ஒரு பெரியார் அதன் போக்கைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். நாட்டின் பல பாகங்களிலுமிருந்து இளைஞர்கள் கூடி இருந்தனர்: சகல ஆயத்தங்களும் மாணவர்களாலேயே செய்யப்பட்டன. முதிர்ந்தவர் தன்மையில் மாணவர் ஆலோசனைகளைச் செய்தனர். நாட்டின் முன்னேற்றத்திலும், தேசபற்றிலும் இந்நாட்டு இளைஞர் கொண்டுள்ள சிரத்தை எவரையும் பிரமிக்கச் செய்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதேச வர்த்தமானம்

### யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தல்

யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் சென்ற 30ஆம்திகதி புதன்கிழமை யாழ்ப்பாண நகரமண்டபத்திலே சமர்ப்பிக்கப்பட்டன. 23வட்டாரங்களுக்குமாக நியமனப்பத்திரங்கள் சமர்ப்பித்த 72அபேட்சகர்களிலும் 6ஆம்வட்டாரத்துக்குத் திரு. அல்பிறெட் துரையப்பாவும், 19-ம்வட்டாரத்துக்கு ஜனுப் எம். ஏ. சி. எஸ். காதரும் போட்டியின்றித் தெரிவு செய்யப் பட்டுள்ளனர். 15ஆம்வட்டாரத்துக்குத்தான் அதிகம்கூடிய அபேட்சகர்களாக எட்டுப்பேர் போட்டியிடுகிருர்கள்.

### தற்காலிக சபாநாயகர்

சனப்பிரதிநிதிகள்சபைச சபாநாயகர் திரு. ஷேர்லி கொறியா அவர்கள் சாம்பிராச்சிய பாராளுமன்றசங்க மகாநாட்டிற் கலந்துகொள்ளவிருக்கும் இலங்கைக்கோஷ்டிக்குத் தலைமைவகித்துச் சென்ற24ஆம்திகதியன்று வெளிநாடுசென்றிருப்பதால் அவர் திரும்பி வருகிறவரை ஆறுவாரகாலத்துக்குச் சபையின் தற்காலிக சபாநாயகராக் உடுப்பிட்டி எம். பி யும், உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரம் அவர்கள் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்ருர்.

### இருதயமாற்ற சிகிச்சை

ஆசிய, ஐரோப்பிய நாடுகளிலேயே முதன்முதலாக இலங்கையிலே முதன்முறைவாக ஓர்இருதயமாற்ற சத்திரசிகிச்சை கொழும்பு ஆசினர் பெரிய ஆஸ்பத்திரியில் சென்றவியாழக்கிழமை வெற்றிகரமாக நடைபெற்றுள்ளது. 14வயதுள்ள நோய்கண்ட ஒருமாணவிக்கு அவளுடைய குடலிலிருந்தே எடுக்கப்பட்ட சவ்வுஒன்றிலிருந்து தயாரிக்கப்பட்ட அடைப்பிதழ்கொண்டு இந்த இருதயமாற்றச் சத்திரசிகிச்சை நடத்தப்படலாயிற்று.

### மோட்டார்படகு வந்தது

திருகோணமலையிலே பழுதடைந்த நிலையிலே கட்டப்பட்டிருந்த "அலை அரசி" என்ற மோட்டார்படகு திருத்தப்பட்டு யாழ்ப்பாணம் வந்துசேர்ந்து பரீட்சார்த்தமாகச் சென்ற24ஆம் திகதி நெடுந்தீவுக்கு ஒருபிரயாணம் நடத்தியது. இப்பொழுது நெடுந்தீவு-குறிகாட்டுவான கடற்பிரயாணசேவையை அது கிரமமாக நடத்தத்தொடங்கியிருப்பதாகத் தெரியவருகிறது.

### தடை அகற்றுமாறு வேண்டுகோள்

கட்டணம்அறவிடாத தனியார்பாடசாலைகளிலே இருந்துவரும் தடைகளை அகற்றிவிடுமாறு சமீபத்தில்கூடிய இலங்கைத் தலைமையாசிரியர்கள், ஆசிரியைகள்மகாநாடு அரசாங்கத்துக்கு ஒருவேண்டுகோள் விடுத்திருக்கிறது. தனியார்பாடசாலைகளுக்கு அரசாங்கம் உதவிநன்கொடைப்பணம் வழங்க வேண்டும்; அன்றேல் கட்டணம்அறவிடுதற்கான உரிமைஅளிக்கவேண்டும்; அவற்றிலே கடமையாற்றும் தகுதிபெற்ற ஆசிரியர்களுக்கெல்லாம் முழுப்பென்ஷன்உரிமைகளைக் கொடுக்க வேண்டும்; 1960ஆம்ஆண்டுக்குமுன் சாரணர் படைகளைக் கொண்டிருந்த பாடசாலைகளிலே அவைகளைத் திரும்பவும் ஸ்தாபிக்க அனுமதிக்கவேண்டுமென்று அம்மகாநாடு ஒருபிரேரணையை ஏகமனதாக நிறைவேற்றியிருக்கிறது.

### மாகாண விவசாய மன்னர்

சப்பிரகாம மாகாணத்துக்கு விவசாயமன்னராக அங்கே கேவத்தை விசாரணைப்பங்கைச்சேர்ந்த ஒருகத்தோலிக்கரும், கொடகவெலையில் வசிப்பவரும், தோட்டமுதலாளியுமான திரு. எம். சி. டயஸ் தெரிவுசெய்யப்பட்டிருக்கிருர். இவர் ஏக்கர்ஒன்றுக்கு 222புசல்நெல் விளைவித்துள்ளார். கொடகவெலையிலே சமீபத்தில் நடைபெற்ற விழாஒன்றில் பிரதமர் டட்லி சேனநாயக்கா அவருக்குரிய பரிசிலை வழங்கினர்.

### முன்னுள் சபாநாயகருக்கு ஞாபகசின்னம்

சனப்பிரதிநிதிகள்சபையின் சபாநாயகராய் விளங்கியிருந்து காலஞ்சென்ற சேர் அல்பேட் பீரிஸ்அவர்களின் ஞாபகார்த்தமாக மாருவில — நாத்தாண்டியா வீதிக்கு அவரின்நாமம் சூட்டப்படவேண்டுமென்றும், சனப்பிரதிநிதிகள்சபைச் சபாமண்டபத்தின் மைதானத்திலே அவரின் உருவசிலைஒன்று நிறுவப்படவேண்டுமென்றும, அவரின் ஞாபகமாகத் தபாலமுத்திரைஒன்று வெளியிடப்படவேண்டுமென்றும் யற்றக்கலன்பற்று கிராமச்சபை சென்றவியாழக்கிழமை நடந்தேறிய அதன்கூட்டத்தில் ஒருபிரேரணை நிறைவேற்றியிருக்கிறது.

### சுகாதாரக் கல்வி

பாடசாலைகளிலே சுகாதாரக்கல்வியைக் கட்டாயபாடமாக்கச் சுகாதார மந்திரி முடிவுசெய்திருக்கின்ருர். இதனை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான சட்டம இப்போது தயாரிக்கப்பட்டுவருகிறது. இதுசம்பந்தமாய்ச் சுகாதாரமந்திரியும, கல்விமந்திரியும் கலந்துபேசியிருக்கிருர்கள்.

### எருமைகளுக்குப் பாதுகாப்பு

பொலனறுவை, அனுராதபுரம், அம்பாறை, குருநாகல், திசமகாமை ஆகிய பகுதிகளில் கமத்தொழிலுக்கு எருமைகள் அதிகமாகத் தேவைப்படுகின்றன. ஆனல், கடாமாடுகளின்பெருக்கம் குன்றிக்கொண்டுவருவதாலே மாமிசத்துக்கென்று எருமைகளைக் கொல்லுவதை முற்றாகத் தடைசெய்யுமுகமாக ஒருபுதியசட்டம் இயற்றுவதுபற்றிக் கமத்தொழில்மந்திரி காரியாலயம் தற்பொழுது ஆலோசனைசெய்துவருகிறது.

### காங்கேசன் சிமெந்து

காங்கேசன் சிமெந்துக்கு வருகிற தைமாதம்வரை பெர்மிற் வழங்கப்படமாட்டாது. அதனல், இவ்வருடம முடிகிறவரை சிமெந்துக்கானபுதியபெர்மிற்றுகளுக்குச் சிபாரிசுசெய்ய வேண்டாமென்று அந்தந்தப்பிரிவுக் காரியாதிகாரிகள் கிராமசேவகர்களுக்குத் தெரிவித்திருக்கின்ருர்கள்.

### ரின்மீன் தொழிற்சாலை

பேசாலையிலே அமைக்கப்பட்டுவரும் ரின்மீன்தொழிற்சாலை அடுத்தவருடம் முற்பகுதியில் செயற்படத்தொடங்குமிடத்து அதில் நாளொன்றுக்கு இரண்டுதொன்மீன் ரின்களில் அடைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதற்குவேண்டிய சிறந்தமீன்களைப் பெற்றுக்கொள்ளுமுகமாக எருக்கலம்பிட்டி உள்ளாற்றுக் கடற்கரையோரமாக மீன்வளர்ப்புப் பண்ணைகளை அமைப்பதற்கான ஏற்பாடுகளும் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### அருவியாற்றுப் பாலம்

மன்னூர் மாவட்டத்திலுள்ள அருவியாற்றுப் புதியபாலத்துக்குச் சமீபத்திலே தபால்—தந்திப் போக்குவரத்து மந்திரியான திரு. மொண்டேகு ஜயவிக்கிரம அத்திவாரக்கல் நாட்டியுள்ளார். இது முசலிப்பகுதி மக்களுக்கு அதிகம்நன்மையானது. அத்தருணம் மன்னூர் எம். பி. திரு. வி. ஏ. அழகக்கோன் அவர்கள் மந்திரிக்கு நன்றிதெரிவித்துப் பாலவேலை இருவருடகாலத்தில் பூர்த்திசெய்யப்படுமெனத் தாம்நம்புவதாக அறிவித்தார்.

புத்தக மதிப்புரை

## புனிதர் பிரான்சிஸ் அசிசியார் வரலாறு

நூல் ஆசிரியர் :- திரு. யோ. ஜூலியஸ் இராசையா, T. O. S. F.

பதிப்பகம்:- வஸ்தியன் அச்சகம்.

பக்கம்:- 330.

விலை:- பிரதி 7ரூபா. 50சதம்.

கிடைக்குமிடம்:- 6, புனித மரியநாயகி லேன், ஊர்காவற்றுறை, இலங்கை.

கத்தோலிக்க திருச்சபையாகிய ஞானமண்டலத்தின்கண பிரபல்யம் பெற்று ஒளிகாலும் புனிதர்களில் ஒருவராகத்திகழும்புனிதர்பிரான்சிஸ் அசிசியாரது தருமவாழ்க்கையின் அரியவரலாற்றினை 172சித்திரப்படங்கள்மூலம் விளக்கிக்காட்டும் அருமையான புத்தகம்ஒன்றை நமதுஎழுத்து மேசையில் நாம் நெடுநாளாகக் கொண்டுள்ளோம். இதன்அட்டையிலே புன்னகைதவழும் பொலிந்த முகத்துடன் காட்சியளிக்கும் அவர் முன்பாக ஓநாய்ஒன்று தலையைத் தாழ்த்திக் கால்ஒன்றைத்தூக்கி ஆசாரஞ்செய்கின்றது. ஈட்டிகள் முதலாம் ஆயுதபாணிகளாய் அதனைத் துரத்திவந்தவர்கள் அப்பால்நின்று ஆச்சரியத்தவராய்க் காட்சிபார்க்கின்ருர்கள். நம்மைப் பொறுத்தமட்டிலே இப்புத்தகத்திலுள்ள ஒரேயொருகுறை அது பிரான்சியமொழியில் வெளிவந்திருப்பதே.

இந்தக்குறையை நிவிர்த்திசெய்யுமுகமாகப்போலும் அப்புனிதரின் இந்தவரலாற்றுநூல் எமது இன்பத் தமிழ்மொழியில் வெளிவந்துள்ளதாக்குமென்ற ஓர்எண்ணம் முதலாய் ஒருகால்எமக்குப்பிறந்தது. இந்நூல் 21அத்தியாயங்களாக வகுக்கப்பெற்று அவரின் குடும்பவரலாறு முதல் மரணம்வரை அவரது புனித வாழ்க்கையில் நிகழ்ந்துள்ளபலநிகழ்ச்சிகளையும் அழகாக எடுத்துக்கூறுகின்றது.

பாரியசெல்வந்தர் குடும்பம்ஒன்றில் பிறந்து, உலகசுகபோகங்களை உளங்கொண்டமட்டும் அனுபவித்து, உல்லாசவாழ்க்கை நடாத்தப்போதிய செல்வவளமிருந்தும் அதனையெல்லாம் அறவேதுறந்து தரித்திரத்தின்மடியில் தவழ்ந்து, தவத்தின் பாதையில் நடந்து அவர் தொடக்கிய புனிதவாழ்க்கையும், உலகில் அதனுல் உண்டான மறுமலர்ச்சியும் கடந்த ஏழரை நூற்றுண்டுகளிலும் ஆடவர்கள், பெண்மணிகள், இல்லறத்தவர், துறவறத்தவர் என்பவர்களாய் அம்மம்ம! எத்தனை ஆயிரபதினுயிர, இலட்சக்கணக்கான மக்களுக்குப் புத்துணர்ச்சியையும், ஆன்மீக மறுமலர்ச்சியையும், புனித வாழ்வையும் உண்டுபண்ணியுள்ளன என்பது எடுத்துக்கூறும்தரமோ!

நாஸ்திகர்கள், வேதவிரோதிகள் தானும் அவரது தூயவாழ்க்கையின் சிறப்பை ஒப்பொருவேனை உலகுக்கு ஓர்எடுத்துக்காட்டாக எடுத்துககாட்டியிருப்பதை நாம் அறிவோம். ஆகவே, இந்தஅருமைப்பெருமையான நூல் பிரான்சிஸ்குவின் மூன்றுமசபையினருக்கு மாத்திரமன்று, அனைவருக்குமே ஓர்அரும்பெரும் பொக்கிஷமாகும். நம்தாய்மொழியாகிய தமிழ்மொழியிலே சரித்திரமுறையாகத் தக்கஆதாரங்களையும், பொருத்தமான படங்களையும் கொண்டு எழுதப்பட்டுள்ள புனிதர் பிரான்சிசின் சீவியவரலாற்று நூல் ஒன்று இல்லாக்குறையை இது நிவிர்த்திசெய்துவிட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. இப்புதிய நூல் அப்புனிதரைத் தமிழுலகிற்கு இயன்றவரை அறிமுகஞ்செய்வது பாராட்டத்தக்கது. அவர் பிறந்து, வளர்ந்து போற்றற்பால தொண்டுகள்புரிந்து, பரகதியடைந்த புண்ணியபூமியாகிய அசிசிப்பதியையும், அவரது வரலாற்றுடன் சம்பந்தப்பட்ட பூசிததலங்களையும் கண்ணாரக்கண்டு, அவரைப்பற்றிய அரியபலவிஷயங்களையும் காதாரக்கேட்டுத் திரும்பிய ஆசிரியர் இதனை அத்துணை சிறப்பாக எழுதியிருப்பது ஆச்சரியமல்ல. இதனைத் தமிழ்மக்கள் மனமாரவரவேற்று, ஆர்வத்துடன்படித்துப் பயனெய்தவேண்டுமென்பதே நமதுபேராவல் என்க.

## நாட்டின் முன்னேற்ற வேலைகளுக்கு இளைஞருக்கு ஒரு வருட சேவையா?

சென்றவாரம் கொழும்பில் பல இளைஞர்கள் சங்கங்கள் ஒன்றுகூடி ஒருமகாநாடு நடத்தினர். அம்மகாநாட்டில் பிறநாட்டு இளைஞர் சங்கத்தினர்களும் பிரதிநிதிகள்மூலம் சமுகம் அளித்தனர். செனேட் சபைத்தலைவர் ஏ. இரத்தினுயகா பிரதம அதிதியாக நிகழ்த்திய உரையிலே "1963-ம்ஆண்டை இளைஞர்கள் வருடமென்று கூசாது எடுத்து ஓதலாம்" என்ருர். பலநாடுகளிலும் அரசாங்கங்கள் செய்துவந்த தவறுகளை இளைஞர்கள் தமது முயற்சியினுல் உணரவைத்து விட்டனரென்றும், இளைஞர் கூறும் குறைகளை ஆராய்ந்துபார்த்து அவற்றைத் திருத்திவைப்பதில் கவனம்செலுத்தாத அரசாங்கம் தமது கடமையில் தவறுகின்றது என்றும் அவர் எடுத்துக்காட்டினுர். அன்று நடந்த ஆலோசனைச்சங்கத்தில் எடுத்துக்கொண்ட பல முடிவுகளில் ஒன்று பிரதானமாகும். நாட்டின் முன்னேற்றத்துககு இளைஞர்கள் ஒவ்வொருவரும் கட்டாயமாக ஒருவருட சேவையிலாவது ஈடுபடவேண்டும் என்பதே அம்முடிவாகும். தமது இவ்விருப்பத்தை இந்நாட்டு அரசாங்கத்துக்கு அறிவித்துவைக்க முடிவுசெய்யப்பட்டது.

## கட்சிமுறை அரசியல் ஆட்சி தேசாபிமானத்தை அழிக்கின்றதா?

மட்டக்களப்பு, சென். மைக்கேல்கல்லூரி அதிபர் வண. பி. எம். பீரிஸ்சுவாமியார் அக்கல்லூரிப் பரிசளிப்பு தினத்தன்று ஆற்றியசொற்பொழிவில் எமது நாட்டில் நிலவும் கட்சிமுறை அரசியல் போக்கு உண்மையான தேசாபிமான செயல்களுக்குப் பலசமயங்களிலும் தடையாய் விளங்குகின்றது என்று கூறினுர். கட்சியின் நலனுக்காக தேசத்துக்கு உகந்தனவற்றைச் செய்ப அரசியல்வாதிகள் தவறிவிடுகின்றனரென்பதை அவர் அன்று சுட்டிக்காட்டினுர். மேலும் சோம்பேறித்தனமே எமதுநாட்டின் முக்கிய சத்துராதிஎன்றும், எமதுமக்களிடையே உள்ள சகல வித்தியாசங்களையும் அகற்றிவிட்டு நாட்டில்நிலவும் சோம்பேறித்தனத்தை நீக்க யாவரும் முயலவேண்டுமெனவும் கூறினுர்.

மகிழ்ச்சியின் சாவி பொறுமை.

...துருக்கிய பழமொழி.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வசிக்கும் திரு. சீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். [illegible] அச்சகத்தில் 1968ஆம் ஆண்டு கார்த்திகை மீ 2-ந்தேதி [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org